# DEPOSITION OF WITNESS

---

## IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP .No. | : | 59/2021 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | இருதய அலெக்சாண்டர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.06.2025

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன்.நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் எந்த ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டி வருகிறேன் என்றால் ராம்நகர் ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டி வருகிறேன். இந்த விபத்து சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அது சம்பந்தமாக குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் எதுவும் அளித்துள்ளேனா என்றால் இல்லை. இந்த விபத்து எதனால் ஏற்பட்டது என்றால் நான் சவாரி செய்து விட்டு வந்த போது எனக்கு முன்மாக சதிஷ் இன்பராஜ் அவர் அம்மாவுடன் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது மாடு குறுக்கே வந்ததால் அவர் இருசக்கர வாகனத்தை பிரேக் போட்டவுடன் வண்டி கிழே விழுந்து அவரது அம்மா கீழே விழுந்துவிட்டார். அவரது அம்மா தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்றால் நான் கவனிக்கவில்லை.

2. நீங்கள் சொல்வது போல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் மனுதாரர் எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் எனக்கு சொந்த காரரா என்றால் இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.